**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.45/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-3 |
| Name | : | பூமணி, வயது 17 |
| Father Name/Husband Name | : | பூபதிராஜா |
| Village | : | கழுகுமலை |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | பட்டதாரி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of June 2024.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கழுகுமலையில் வசித்து படித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் விபத்து நடந்த போது பார்த்துள்ளேன். வழக்கில் இறந்த பெரியசாமி எனது நண்பர் அ.சா.1ன் அப்பா. கடந்த 20.05.2023 ஆம்தேதி சனிக்கிழமை அன்று இரவு 09.00 மணியளவில் நானும் சந்தோஷ்குமாரும் கழுகுமலை ஆஞ்சநேயர் கோவில் அருகே தெற்கில் இருந்து வடக்காக நடந்து வந்து கொண்டிருந்தோம்.
2. அப்போது எதிரி வடக்கில் இருந்து தெற்காக TN 96 B 0447 என்ற இருச்சக்கர வாகனத்தில் வடக்கில் இருந்து தெற்காக வந்தார். பெரியசாமி சாலையின் வலது புறமாக நடந்து சென்று கொண்டிருந்தார். எதிரி இருச்சக்கர வாகனத்தில் அதிகவேமாக ஹாரன் அடிக்காமலும் அவர் மீது மோதிவிட்டார்.
3. அதில் அவர் கீழே விழுந்ததில் அவருக்கு மூக்கில் இருந்து இரத்தம் வந்தது. இது பற்றி பெரியசாமியின் மனைவிக்கு போன் மூலம் தகவல் சொன்னோம். பின்னர் கார் மூலம் பெரியசாமியை கழுகுமலைக்கு அழைத்துச் சென்றோம்.
4. பின்னர் மேல் சிகிச்சைக்கு அவரை அ.சா.1ம் அவரது அம்மாவும் அழைத்துச் சென்றார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்,.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. சம்பவத்தின் போது பெரியசாமி பேண்ட், சர்ட் போட்டிருந்தாரா, லுங்கி

அணிந்திருநதாரா அல்லது வேஷ்டி அணிந்திருந்தாரா என்றால் பேண்ட் சர்ட் போட்டிருந்தார். அவர் உடுத்தியிருந்த உடைக்கு சேதங்கள் இல்லை என்றால் சரிதான். தென்வடல் ரோட்டில் கீழ் பக்கம் தான் வழக்கு சம்பவம் என்றால் சரிதான்.

2. காரில் ஏற்றிச் சென்றதாக சொல்லியுள்ள நிலையில் அந்த காரின் என்ன என்றால் தெரியாது. டிரைவர் பெயர் என்ன என்றால் பாண்டி. எந்த ஊரைச்சேர்ந்தவர் என்றால் எங்கள் ஊர். என்ன கார் என்றபால் இண்டிகா கார்.
3. அந்த கார் அந்த வழியாக சென்ற கார் என்றால் இல்லை நான் தான் போன் செய்து வரச்சொன்னேன். கழுகுமலை அரசு மருத்துமனையில் சேர்த்த போது மருத்துவர்கள் என்ன நடந்தது என்ன காயம் என்பது குறித்து கேட்டார்கள் என்றால் ஆம்.
4. மேற்படி விவரங்களை நீங்கள் சொன்னீர்களா அல்லது உங்கள் நண்பர் சொன்னாரா என்றால் என் நண்பர் சந்தோஷ் சொன்னார் நான் உடன் இருந்தேன். அவர்கள் விவரத்தை எழுதிக் கொண்டார்கள் என்றால் ஆம்.
5. முதல் உதவி சிகிச்சை கொடுத்த பின்னர் திருநெல்வேலி செல்லுமாறு அனுப்பினார்கள் என்றால் ஆம். உங்கள் பின்னால் பெரியசாமி நடந்து வந்தார் என்றால் இல்லை முன்னாடி. உங்களை நோக்கி வந்து கொண்டிருந்தாரா என்றால் இல்லை நாங்கள் சென்ற அதே திசையில் சென்றார்.
6. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 09.00 மணி என்றால் சரிதான். சந்தோஷ்குமார் குடும்பத்தை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சிறு வயது முதல் தெரியும். சம்பவம் நடந்த உடன் அங்கு கூட்டம் கூடிவிட்டது என்றால் சரிதான்.
7. சம்பவத்தின் போது வடக்கும் தெற்கும் ஆள்நடமாட்டம் இருந்தது என்றால் ஆட்கள் இல்லை. விபத்து சம்பந்தபட்டதாக சொல்லப்படும் வண்டியின் எண் மறுநாள் தான் உங்களுக்கு தெரியும் என்றால் இல்லை இரவு பார்த்தேன்.
8. அந்த சாலை குறுகலான சாலையா அல்லது அகன்ற சாலையா என்றால் அது ஒருவழிச்சாலை. சாலை விதிகளை மீறி ரோட்டின் வலது பக்கத்தில் பெரியசாமி நடந்து போன போது அவருக்கு இருந்த இதய கோளாறு காரணமாக இரத்த அழுத்தம் ஏற்பட்டு கீழே விழுந்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் விபத்து இழப்பீடு பெற எதிரி மீது அ.சா.1 குடும்ப நண்பர் என்பதால் அவருக்கு அனுசரனையாக சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.
9. சொன்ன நேரம் தேதியில் எதிரி வாகனத்தை அதிகவேமாகவும் அஜாகிரதையாகவும் ஓட்டியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல பெரியசாமிக்கு ஏற்பட்ட காயம் எதிரியின் செயலால் ஏற்பட்டது

என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.